# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.151/2023</u>

2024-ம் ஆண்டு ஜூன் திங்கள் 18-ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசந்திரன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். ம.சா.ஆ.16 முதல் ம.சா.ஆ.29 வரை குறியிடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ.23 முதல் ம,சா.ஆ.26 வரையிலான ஆவணங்கள் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என் மகன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றார். வண்டியை ஓட்டிசென்ற விஜய் என்பவருக்கு வண்டி சொந்தமானது. 4-ம் மனுதாரருக்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகன் வேலை பார்த்து சம்பாதித்தார் என்பதற்கான ஆவணத்தை வழங்கியவர்களை விசாரித்தால் தான் உண்மை தன்மை தெரியும் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை நானே தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. என் மகனை நம்பி நானும், என் குடும்பமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு

என் மகன் பின்னால் அமர்ந்து சென்ற வாகன ஓட்டுநர் தான் காரணம் என்றும், அந்த வாகனத்தின் காப்பீட்டாளரையும் சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெறவேண்டும் என்று என் மகனின் வருமானத்தை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.